2021 | ஜனவரி 14, வியாழக்கிழமை | நண்பன் | 3

## நெகிரி செம்பிலான் சமஸ்தானாதிபதி பிறந்தநாளில்

# 272 பேருக்கு விருதுகள்

(துர்க்கா)



சிரம்பான், ஜன, 14-
நெகிரி செம்பிலான் சமஸ்தானாதி பதியின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மருத்துவ நிபுணர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், மாநில ஆட்சிக் குழு உறுப்பினர்கள், சமூக சேவையாளர் கள் உள்ளிட்ட 272 பேர் விருதுகள் வழங்கி கௌரவிக் கப்பட் டுள்ளனர்.

நெகிரி மாநில தலைமைச் செயலாளர் டத்தோ டாக்டர் ரசாலி அப்துல் மாலேக் நேற்று விஸ்மா நெகிரியில் நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் விருது பெறு வோரின் பட்டியலை வெளியிட் டார்.

கோவிட்-19 தொற்றுப் பரவலின் காரணமாக வழக்கமாக கோலப்பிலா, ஸ்ரீ மெனாந்தி அரண்மனையில் நடைபெறும் விருதளிப்பு விழா பிறகொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக அவர் சொன்னார்.

பிரபல இருதய நோய் நிபுணரான டத்தோ டாக்டர் தமிழ்ச்செல்வன் முத்துசாமி டி.எஸ்.டி.எம். பட்டத்துடனான டத்தோ விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறார்.

இந்த விருது பெற்றவர்களில் நெகிரி மாநில ஆட்சிக் குழு உறுப்பினரும், லாபு சட்டமன்ற உறுப்பினருமான ஹாஜி இஸ்மாயில் பின் அகமட், மற்றோர் ஆட்சிக் குழு உறுப்பினரான கோல கிளவாங் சட்டமன்ற உறுப்பினர் ஹாஜி பக்ரி பின் சாவீர் இருவரும் அடங்குவர்.

பகாவ், வட்டாரத்தில் சமூக சேவையாளரும் பிரபல வழக்கறிஞருமான கோபி வேலுசாமி டி.பி.என்.எஸ். பட்டத்துடனான டத்தோ விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

மாநில ஜ.செ.க. பொறுப்பாளர்களான சிவனேஸ்வரன் செல்வராஜன், எம்.கே.ஜெயகுமார் நாராயணசாமி உள்ளிட்டோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

Scanned by TapScanner